வினாத் தொகுப்புக் குறியீடு : **AAA**

பதிவு எண் | | | | | | | | |

# 2019

# பொதுத் தமிழும் பொது அறிவும்

கால அளவு : மூன்று மணி நேரம் ] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்கத் தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையேனும் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்புக் குறியீட்டை (Question Booklet Code) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும். வினாத்தொகுப்புக் குறியீட்டை விடைத்தாளில் முறையாக குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக்காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் (A), (B), (C), (D) என **நான்கு** வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியெனக்கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும். உதாரணமாக, நீங்கள் (B) என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக்காட்ட வேண்டும்.

   (A) ● (C) (D)
9. ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும்.
10. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தைவிட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
12. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளே முடிவானதாகும்.
13. நீங்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் இரண்டில் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்ப வேண்டும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
14. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL

SPACE FOR ROUGH WORK

1. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவது வைத்து எண்ணப்படும் நூல்

(A) அகநானூறு

(B) ஐங்குறுநூறு

(C) நற்றிணை

(D) பரிபாடல்

2. அகத்திணையும், புறத்திணையும் சேர்த்துக் கூறும் எட்டுத்தொகை நூல் எது?

(A) பரிபாடல்

(B) நற்றிணை

(C) ஐங்குறுநூறு

(D) பதிற்றுப்பத்து

3. தவறான இணையைத் தேர்வு செய்க :

(A) குறிஞ்சி — கபிலர்

(B) முல்லை — ஓதலாந்தையார்

(C) மருதம் — ஓரம்போகியார்

(D) நெய்தல் — அம்மூவனார்

4. பின்வருவனவற்றுள் தவறானதைத் தேர்வு செய்க :

(A) கம்பர் தேரழுந்தூரில் பிறந்தவர்

(B) கம்பரை ஆதரித்த வள்ளல் சீதக்காதி

(C) சரசுவதி அந்தாதியை இயற்றியவர் கம்பர்

(D) கம்பரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு

5. செல்வச் செவிலி – இலக்கணக் குறிப்பு

(A) உவமை
(B) அடுக்குத்தொடர்
(C) எண்ணும்மை
(D) உருவகம்

6. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை
– இவ்வடிகளில் கைத்தொன்று – பொருள் யாது?

(A) படை கவசம்
(B) படை கருவிகள்
(C) கைப்பொருள்
(D) வலிமையான ஆயுதம்

7. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு – எதுகை வகையைக் கண்டுபிடிக்கவும்.

(A) பொழிப்பு எதுகை
(B) கூழை எதுகை
(C) மேற்கதுவாய் எதுகை
(D) கீழ்க்கதுவாய் எதுகை

8. 'அழக்கொண்ட எல்லாம் அழப்போம், இழப்பினும்' – இந்த அடியில் அமைந்துள்ள எதுகையைத் தேர்க.

(A) கூழை எதுகை
(B) மேற்கதுவாய் எதுகை
(C) கீழ்க்கதுவாய் எதுகை
(D) பொழிப்பு எதுகை

9. தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க

(A) அப்பூதி அடிகள் நான்மறை கற்கவில்லை.

(B) அப்பூதி அடிகள் நான்மறை கற்றார்.

(C) அப்பூதி அடிகள் நான்மறை கற்றாரா?

(D) அப்பூதி அடிகள் நான்மறை கற்பித்தார்.

10. இலக்கணக் குறிப்புத் தருக : கங்கையும் சிந்துவும்

(A) உம்மைத்தொகை

(B) பெண்பால் பெயர்கள்

(C) எண்ணும்மை

(D) அன்மொழித்தொகை

11. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம்

(A) மிகும்

(B) மிகாது

(C) சில இடங்களில் வரும்

(D) சில இடங்களில் வராது

12. தாழ்பூந்துறை – என்ற சொல்லுக்குரிய இலக்கண குறிப்பு தருக

(A) ஏவல் வினைமுற்று

(B) உரிச்சொல் தொடர்

(C) பண்புத்தொகை

(D) வினைத்தொகை

13. பின்வரும் தொடரிலுள்ள நிகழ்கால வினைமுற்றைத் தேர்வு செய்க?

(A) பழுத்த பழம்

(B) பழுக்கும் பழம்

(C) பழுக்கின்றது

(D) பழங்கள் பழுத்தன

14. படி என்ற வேர்ச்சொல்லில் இருந்து வினை எச்சத்தை உருவாக்குக?

(A) படித்து

(B) படித்தல்

(C) படித்த

(D) பாடுதல்

15. "கல்" என்னும் வேர்ச்சொல்லின் பதம் அறிக?

(A) கற்றல்

(B) கற்பனை

(C) கண்டான்

(D) கல்லை

16. "இயல்பானது" வேர்ச்சொல்லறிக

(A) இயல்

(B) இயல்பு

(C) இயைபு

(D) இய

17. 'ஏ' என்ற ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள்

(A) தலைவன்

(B) நெருப்பு

(C) அரண்

(D) அம்பு

18. குழலியும் பாடத் தெரியும் – தொடரில் உள்ள பிழையை நீக்கி சரியான தொடரை தேர்ந்தெடுக்க

(A) குழலிக்குப் பாடத்தெரியும்

(B) குழலியின் பாடத்தெரியும்

(C) குழலி பாடத்தெரியும்

(D) குழலியால் பாடத்தெரியும்

19. தமிழ்ச் சொல்லைக் கண்டறிக :

(A) அனுமதி

(B) ஈசன்

(C) குபேரன்

(D) மணிமுடி

20. பொருந்தா இணையைச் சுட்டுக :

(A) குறிஞ்சி — யாமம்

(B) முல்லை — மாலை

(C) மருதம் — நண்பகல்

(D) நெய்தல் — எற்பாடு

21. மிசை – எதிர்ச்சொல் காண்க :

(A) இசை

(B) கீழ்

(C) விசை

(D) நாள்

22. கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் – இத்தொடருக்குரிய சரியான எதிர்ச்சொல்லைத் தருக.

(A) கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்

(B) கலைச்செல்வி கட்டுரை எழுத விரும்பவில்லை

(C) கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள்

(D) கலைச்செல்வி கட்டுரை வாசிக்கவில்லை

23. பொருத்துக

| | வேற்றுமை | | உருபு |
|---|---|---|---|
| (a) | நான்காம் வேற்றுமை | 1. | இன் |
| (b) | ஐந்தாம் வேற்றுமை | 2. | அது |
| (c) | ஆறாம் வேற்றுமை | 3. | கண் |
| (d) | ஏழாம் வேற்றுமை | 4. | கு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

24. கீழ்க்கண்ட கூற்றுக்களுள் சரியானவற்றைத் தேர்வு செய்க

1. தாயுமானவர் பிறந்த ஊர் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பழவேற்காடு
2. இவர் காலம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு
3. தாயுமானவர் திருப்பாடல் திரட்டு என்பது இவர் எழுதிய நூல்
4. திருச்சியை ஆண்ட விசயரகுநாத சேதுபதியிடம் கருவூல அலுவலராகப் பணியாற்றியவர்

(A) 1, 4 சரி
(B) 2, 3 சரி
(C) 2, 4 சரி
(D) 1, 3 சரி

25. தாயுமானவர் ஆற்றிய பணி எது?

(A) அரசுக்கணக்கர்
(B) தட்டச்சுப்பணியாளர்
(C) பத்திரிக்கையாளர்
(D) இசைப்பணியாளர்

26. தென்னாப்பிரிக்க வரலாற்றில் யாருடைய பெயர் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்?

(A) தில்லையாடி வள்ளியம்மை திலகவதி

(B) தில்லையாடி வள்ளியம்மை

(C) ஜான்சிராணி

(D) நாகம்மை

27. உலகம் உருண்டையானது என்பதைத் தம் தொலைநோக்கியால் கண்டறிந்து சொன்னவர் யார்?

(A) கலீலியோ

(B) நிகோலஸ்கிராப்ஸ்

(C) சி.வி. இராமன்

(D) தாமஸ் ஆல்வா எடிசன்

28. தமிழுக்கு அரும்பணி ஆற்றிய அமெரிக்கப் பேராசிரியர்களில் ஒருவர்

(A) ஆறுமுக நாவலர்

(B) ஜோசப் கொன்ஸ்டான்

(C) ஜேம்ஸ் பிராங்கா

(D) ஜி.யு. போப்

29. "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்று தன் கல்லறையில் எழுதச் சொன்னவர் யார்?

(A) கால்டுவெல்

(B) ஜி.யு.போப்

(C) வீரமாமுனிவர்

(D) ஷெல்லி

30. "வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்
வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி" என்று
தமிழின் பெருமையைப் பறைசாற்றியவர் யார்?

(A) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(B) பெருங்குன்று கிழார்

(C) பெருநாவலர்

(D) பாவேந்தர் பாரதிதாசன்

31. 'துரை மாணிக்கம்' என்பது இவரின் இயற்பெயர்

(A) கவிஞர் சுரதா

(B) கவிஞர் மீரான்

(C) பாரதிதாசன்

(D) பெருஞ்சித்திரனார்

32. திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் யார்?

(A) சி.வை. தாமோதரம்

(B) வ. சுப. மாணிக்கம்

(C) தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

(D) சீனி. வேங்கடசாமி

33. பரிதிமாற்கலைஞர் நடத்தி வந்த ஞானபோதினி என்னும் இதழைத் தொடங்கி வைத்தவர் யார்?

(A) மு.சி. பூர்ணலிங்கம்

(B) தெ. பொ. மீனாட்சி சுந்தரம்

(C) கே. வி. சுப்பையா

(D) எல்.வி. இராமசுவாமி

34. “கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல்” எனக் கூறியவர் யார்?

(A) கந்தர்வன்
(B) நாஞ்சில் நாடன்
(C) புதுமைப்பித்தன்
(D) வண்ணதாசன்

35. தொல்காப்பியத்தில் நாடகப் பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்த இயல்

(A) மரபியல்
(B) பொருளியல்
(C) மெய்ப்பாட்டியல்
(D) களவியல்

36. பண்ணொடு கலந்தும் தாளத்தோடு கூடியும் பாடும் கலை எது?

(A) நாடகக்கலை
(B) நாட்டியக்கலை
(C) இசைக்கலை
(D) ஓவியக்கலை

37. ‘சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு’ – என்று கூறியவர்

(A) அண்ணா
(B) காந்தி
(C) அம்பேத்கர்
(D) மு. வரதராசனார்

38. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை பரிசு பெற்ற சுரதாவின் நூல் எது?

(A) துறைமுகம்

(B) சுவரும் சுண்ணாம்பும்

(C) தேன்மழை

(D) சுரதாவின் கவிதைகள்

39. "இரட்டைக்கிளவி போல் இணைந்தே வாழுங்கள் பிரிந்தால் பொருளில்லை..." என்று பாடியவர் யார்?

(A) சுரதா

(B) மு. மேத்தா

(C) தாரா பாரதி

(D) அப்துல் ரகுமான்

40. பாரதிதாசனார் இயற்றிய நாடக நூல் எது?

(A) கண்ணகி புரட்சிக் காப்பியம்

(B) பிசிராந்தையார்

(C) சுவரும் சுண்ணாம்பும்

(D) பாண்டியன் பரிசு

41. நாமக்கல் கவிஞருக்கு "பத்மபூஷண்" விருது வழங்கிச் சிறப்பித்தது யார்?

(A) நடுவணரசு

(B) மாநில அரசு

(C) ஆங்கில அரசு

(D) பிரெஞ்சு அரசு

42. சித்தர்களின் ஆதி சித்தராக கருதப்படுபவர் யார்?

(A) பாம்பாட்டிச்சித்தர்

(B) திருமூலர்

(C) போகர்

(D) கோரக்கர்

43. 'லிட்டன் பிரபு' எழுதிய 'இரகசிய வழி' என்ற நூலைத் தழுவி வெளிவந்த நூல்

(A) மனோன்மணீயம்

(B) அகத்தியம்

(C) முறுவல்

(D) குணநூல்

44. மனோன்மணியத்தை இயற்றியவர்

(A) சுந்தரம் பிள்ளை

(B) சுந்தர முனிவர்

(C) சுந்தரர்

(D) சுந்தர மூர்த்தி

45. <u>செங்கீரைப்</u> <u>பருவம்</u> – பிள்ளைத்தமிழில் எந்தப் பருவமாக விளங்குகிறது?

(A) இரண்டாம் பருவம்

(B) ஐந்தாம் பருவம்

(C) முதற் பருவம்

(D) மூன்றாம் பருவம்

46. பெரியபுராணத்திற்கு சேக்கிழாரிட்டப் பெயர்

(A) சிவதொண்டர் புராணம்

(B) சிவனடியார் புராணம்

(C) திருத்தொண்டர் புராணம்

(D) தொண்டர்சீர் புராணம்

47. சுந்தரம்பிள்ளையைப் போற்று முகமாகத் தமிழக அரசு நிறுவியது யாது?

(A) பல்கலைக்கழகம்

(B) அரசவைக் கவிஞர் பணி

(C) அறக்கட்டளை

(D) பேராசிரியர் பணி

48. பொருளறிந்து பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தடக்கர் | 1. | கரடி |
| (b) | எண்கு | 2. | காட்சி |
| (c) | வள்உகிர் | 3. | பெரிய யானை |
| (d) | தெரிசனம் | 4. | கூர்மையான நகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

49. குண்டலகேசியின் கதைத் தலைவி – குண்டலகேசி, அவளின் வேறு பெயர்

(A) கைகேயி

(B) பத்தரை

(C) சுமத்திரை

(D) மாதவி

50. கவுந்தியடிகள் எந்த மதத்தைச் சார்ந்த துறவி?

(A) சமணத் துறவி

(B) பௌத்தத் துறவி

(C) இஸ்லாமியத் துறவி

(D) சைவ துறவி

51. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக கருதப்படும் நூல் யாது?

(A) சீவகசிந்தாமணி

(B) மணிமேகலை

(C) குண்டலகேசி

(D) நீலகேசி

52. "அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இது கேள் ! – மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும், உடையும், உறையுளும்"

இவ்வடிகள் இடம் பெறும் நூல் எது?

(A) சிலம்பு

(B) கம்ப இராமாயணம்

(C) மணிமேகலை

(D) பெரிய புராணம்

53. குறுந்தொகை நூலின் 'பா' – வகை யாது?

(A) கலிப்பா

(B) வஞ்சிப்பா

(C) வெண்பா

(D) அகவற்பா

54. துடியன், நாயினன் தோல் செருப்பு ஆர்த்த பேர்
அடியன், அல்செறிந் தன்ன நிறத்தினான்
– இக்கூற்றிற்குரியவர் யார்?

(A) இராமன்
(B) இலக்குவன்
(C) அனுமன்
(D) குகன்

55. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று

(A) நற்றிணை
(B) குறிஞ்சிப்பாட்டு
(C) பரிபாடல்
(D) ஏலாதி

56. பெருமுத்தரையர்கள் பற்றிய குறிப்புகள் அமைந்துள்ள நூல் யாது?

(A) இன்னா நாற்பது
(B) நான்மணிக்கடிகை
(C) நாலடியார்
(D) சிறுபஞ்சமூலம்

57. கல்விக்கு விளக்காக விளங்குவது எதுவென்றால் அவர்களிடம் உள்ள ———— ஆகும்.

(A) நற்பண்பு
(B) நற்குணம்
(C) புகழ்
(D) நல்லெண்ணங்கள்

58. பொருட்பாலின் இயல்கள்

(A) பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்
(B) அரசியல், அங்கவியல், ஒழிபியல்
(C) களவியல், கற்பியல்
(D) பாயிரவியல், அரசியல், களவியல்

59. வேய்புரை தோள் என்ற உவமைத் தொடருக்கு பொருள் தருக.

(A) தென்னை போன்ற தோள்

(B) பளிங்கு போன்ற தோள்

(C) மூங்கில் போன்ற தோள்

(D) வாழை போன்ற தோள்

60. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக.

(A) எழிலரசி சிலப்பதிகாரம் கற்றாள்

(B) எழிலரசியால் சிலப்பதிகாரம் கற்பிக்கப்பட்டது

(C) எழிலரசி சிலப்பதிகாரம் கல்லாள்

(D) எழிலரசி சிலப்பதிகாரம் கற்பித்தாள்

61. தாய்மொழியை உயிராகப் போற்றுமாறு ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார். – பொருத்தமான வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்க.

(A) அயற்கூற்று வாக்கியம்

(B) நேர்க்கூற்று வாக்கியம்

(C) கலவை வாக்கியம்

(D) எதிர்மறை வாக்கியம்

62. பாத்திமா திருக்குறள் கற்பித்தாள்

(A) தன்வினை வாக்கியம்

(B) செய்வினை வாக்கியம்

(C) பிறவினை வாக்கியம்

(D) செயப்பாட்டுவினை வாக்கியம்

63. அவன் சித்திரையான் – எவ்வகை பெயர்

(A) குணப் பெயர்
(B) இடப் பெயர்
(C) காலப் பெயர்
(D) தொழில் பெயர்

64. வேற்றுமை உருபை இணைத்து தொடரை ஒழுங்குபடுத்தி எழுதுக :

மாணவர்கள் வட்டமாக உட்காரச் செய்க.

(A) மாணவர்கள் உட்கார வட்டமாகச் செய்க
(B) மாணவர்களை வட்டமாக உட்காரச் செய்க
(C) மாணவர்களை உட்கார வட்டமாகச் செய்க
(D) மாணவர்களை செய்க வட்டமாக உட்கார

65. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்

(A) மாலை மீது மலையின் மழை பெய்தது நேற்று
(B) மலையின் மாலை மீது நேற்று பெய்தது மழை
(C) நேற்று மாலை மலையின் மீது மழை பெய்தது
(D) பெய்தது மழை மலையின் மீது நேற்றுமாலை

66. அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்து எழுதுக.

(A) கொன்றை, கெண்டை, கண், கீரன், காடை
(B) கெண்டை, கீரன், கொன்றை, காடை, கண்
(C) கண், காடை, கீரன், கெண்டை, கொன்றை
(D) கண், கீரன், காடை, கொன்றை, கெண்டை

67. சொல்லுக்கேற்ற பொருளறிக :

(A) வலிமை — திண்மை

(B) நாண் — தன்னைக்குறிப்பது

(C) கான் — பார்

(D) துணி — துன்பம்

68. சரியான இணையைத் தேர்ந்தெடு

| | மரை | | மறை |
|---|---|---|---|
| (A) | மான் | — | வேதம் |
| (B) | தாமரை | — | புலன் |
| (C) | வேதம் | — | இயல்பு |
| (D) | யானை | — | மறைத்தல் |

69. ஜெராக்ஸ் (**Xerox**) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்

(A) ஒளி நகல்
(B) ஒலி நகல்
(C) அசல் படம்
(D) மறு படம்

70. "மா" ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள்

(A) பெரிய
(B) இருள்
(C) வானம்
(D) அழகு

71. பாகற்காய் – பிரித்தெழுதுக

(A) பாகு + அல் + காய்

(B) பாகு + அற்காய்

(C) பாகற் + காய்

(D) பாகு + கல் + காய்

72. பைந்நிணம் – பிரித்தெழுதுக

(A) பை + நிணம்

(B) பை + இணம்

(C) பசுமை + நிணம்

(D) பசுமை + இணம்

73. "திருத்தொண்டர் புராணம்" என்ற அடைமொழியால் அழைக்கப்படும் நூல்

(A) திருவிளையாடற்புராணம்

(B) மேருமந்த புராணம்

(C) திருவாசகம்

(D) பெரியபுராணம்

74. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல் எது ?

(A) ஐங்குறுநூறு

(B) குறுந்தொகை

(C) கலித்தொகை

(D) புறநானூறு

75. தவறான இணை எது?

(A) மணித்தக்காளி – வாய்ப்புண்

(B) முசுமுசுக்கை வேர் – இருமல்

(C) அகத்திக் கீரை – கண்நோய்

(D) வேப்பங்கொழுந்து – மார்புச்சளி

76. பொருந்தாத இணை எது?

(A) மேற்கு மலையில் இருந்து வந்தவை – சந்தனம், ஆரம்

(B) கீழ்க்கடலில் விளைந்தவை – பவளம்

(C) வடமலையில் இருந்து வந்தது – கறி (மிளகு)

(D) தென்கடலில் இருந்து கிடைத்தவை – முத்து

77. அகர வரிசைப்படுத்துக

(A) மிளகு, மருங்கை, முசிறி, மூதூர், மேற்குமலை

(B) முசிறி, மூதூர், மிளகு, மேற்குமலை, மருங்கை

(C) மருங்கை, மிளகு, முசிறி, மூதூர், மேற்குமலை

(D) மருங்கை, முசிறி, மூதூர், மிளகு, மேற்குமலை

78. தென்னாட்டைத் தன்னந்தனியே ஆண்ட பெண்ணரசி என்னும் புகழைப் பெற்றவர் யார்?

(A) இராணி மங்கம்மாள்

(B) ஜான்சி ராணி

(C) தில்லையாடி வள்ளியம்மை

(D) வேலுநாச்சியார்

79. காடுகளில் வாழ்ந்தமக்கள் விலங்கின் பெயர் கொண்டு அமைந்த ஊரின் பெயர் என்ன?

(A) ஆட்டையாம்பட்டி (B) வேப்பனேரி

(C) புளியம்பட்டி (D) புளியங்குடி

80. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி யார்?

(A) அம்பேத்கர் (B) இராஜாஜி

(C) அண்ணா (D) காமராசர்

81. அறிஞர் அண்ணாவின் கவிதைகள் 'தமிழ்ப்பீடம்' என்னும் இதழில் வெளியிடப்பட்டுள்ள ஆண்டு எது?

(A) 2005 (B) 2004

(C) 2003 (D) 2006

82. தமிழில் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டவர்

(A) ஜி.யு. போப் (B) வீரமாமுனிவர்

(C) H.A. கிருஷ்ணப்பிள்ளை (D) ரா.பி. சேதுபிள்ளை

83. 'தபோலி' என்னும் சிற்றூர் எந்த மாநிலத்தில் உள்ளது.

(A) மராட்டிய மாநிலம் (B) குஜராத் மாநிலம்

(C) தமிழ்நாடு (D) கர்நாடகம்

84. பரிதிமாற் கலைஞர் என்று போற்றப்படக் கூடியவர்

(A) மறைமலையடிகள்

(B) உ.வே. சாமிநாத ஐயர்

(C) வி.கோ. சூரியநாராயண சாத்திரியார்

(D) வையாபுரிப்பிள்ளை

85. "தமிழே மிகவும் பண்பட்ட மொழி" என்று பாராட்டியவர் யார்?

(A) கமில்சுவலபில்

(B) மாக்சு முல்லர்

(C) முனைவர் எமினோ

(D) வில்லியம் ஜோன்ஸ்

86. 'இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது' என்றவர் யார்?

(A) மாக்சு முல்லர்

(B) கால்டுவெல்

(C) கெல்லட்

(D) எமினோ

87. விளையாட்டின் அடிப்படை நோக்கம் என்ன?

(A) போட்டி

(B) பொழுதுபோக்கு

(C) உடற்பயிற்சி

(D) உற்சாகம்

88. ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியைக் கண்டுபிடித்தவர் யார்?

(A) எட்வார்டு மை பிரிட்சு

(B) வால்ட் விட்மன்

(C) எடிசன்

(D) கீட்ஸ்

89. "எழுத்து" இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

(A) சிற்பி

(B) சி.சு. செல்லப்பா

(C) ந. பிச்சமூர்த்தி

(D) மு. மேத்தா

90. வழக்குரைஞராகவும், இந்துசமய அறநிலையப் பாதுகாப்புத் துறை அலுவலராகவும் பணியாற்றிய கவிஞர் யார்?

(A) அப்துல் ரகுமான்

(B) சிற்பி

(C) ந. பிச்சமூர்த்தி

(D) இரா. மீனாட்சி

91. "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்!" என்று கூறியவர் யார்?

(A) மு. மேத்தா

(B) பசுவய்யா

(C) ந. பிச்சமூர்த்தி

(D) ஈரோடு தமிழன்பன்

92. "தமிழகத்தின் வேர்ட்ஸ்வர்த்" என்று பாராட்டப்படும் தமிழ் கவிஞர்

(A) பாரதிதாசன்

(B) நாமக்கல் கவிஞர்

(C) வாணிதாசன்

(D) முடியரசன்

93. "வாழ்வினிற் செம்மையைச் செய்பவன் நீயே" என்ற பாடலைத் தமிழ் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ள அரசு எது?

(A) தமிழ்நாடு அரசு
(B) புதுவை அரசு
(C) பிரெஞ்சு அரசு
(D) ஆங்கில அரசு

94. இளங்கோவடிகள், "தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற்புலவன்" என்று யாரைப் பாராட்டியுள்ளார்?

(A) நாதகுத்தனார்
(B) தோலா மொழித்தேவர்
(C) திருத்தக்க தேவர்
(D) சீத்தலைச் சாத்தனார்

95. வாகீசர், அப்பர், தருமசேனர், தாண்டகவேந்தர் என்றெல்லாம் அழைக்கப்படுபவர் யார்?

(A) திருநாவுக்கரசர்
(B) சுந்தரர்
(C) திருஞானசம்பந்தர்
(D) மாணிக்கவாசகர்

96. 'ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லே!
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே!
என்ற பாடலின் ஆசிரியர் யார்?

(A) பட்டினத்தார்
(B) மருதகாசி
(C) உடுமலை நாராயணகவி
(D) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

97. ‘காவடிச் சிந்தின் தந்தை’ என அழைக்கப்படுபவர் ————————.

(A) பாரதியார்

(B) சென்னிகுளம் அண்ணாமலையார்

(C) அருணகிரியார்

(D) விளம்பி நாகனார்

98. கலிங்கத்துப்பரணி – நூலில் அமைந்துள்ள தாழிசைகள் எண்ணிக்கை யாது?

(A) 596 (B) 599

(C) 593 (D) 597

99. “நாயின் வாயினீர் தன்னை நீரெனா

நவ்வி நாவினால் நக்கி விக்குமே” – இவ்வரிகள் இடம்பெற்ற நூல்

(A) வங்கத்துப் பரணி

(B) திராவிடத்துப் பரணி

(C) கலிங்கத்துப் பரணி

(D) தக்கயாகப் பரணி

100. அதியமானின் தூதராக ஔவை சென்றதைக் கூறும் நூல் எது?

(A) பதிற்றுப்பத்து

(B) பரிபாடல்

(C) புறநானூறு

(D) ஆத்திச்சூடி

Question Booklet Code : **AAA**

Register Number | | | | | | | | | |

# 2019

# GENERAL TAMIL WITH GENERAL STUDIES

**Duration : Three Hours]** **[Total Marks : 300**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

---

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This question booklet contains **200** questions. Before answering the questions, you are requested to check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. **If any defect is noticed in the question paper, it shall be reported to the invigilator within the first 10 minutes and get it replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.**
3. Answer **all** the questions. **All** the questions carry equal marks.
4. You must write your register number in the space provided on the top right side of this page. Do not write anything else on the question booklet.
5. An answer sheet will be supplied to you separately by the invigilator to mark the answers.
6. You shall encode your question booklet code in the space provided on page 2 of the answer sheet with Blue or Black ink Ball point pen. If you do not encode properly or fail to encode the above information, your answer sheet will be invalidated.
7. Each question comprises four responses : i.e (A), (B), (C) and (D). You have to select ONLY ONE correct response and mark the same in your answer sheet. If you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question. Your total marks will depend on the number of correct responses marked by you in the answer sheet.
8. In the answer sheet, there are **four** circles Ⓐ, Ⓑ, Ⓒ and Ⓓ against each question. To answer the questions, you have to shade the circle of your choice (ONLY ONE) for each question with Blue or Black in Ball point pen. For a particular question, if Ⓑ is the correct answer, you have to mark your answer as below;

   Ⓐ ● Ⓒ Ⓓ

9. If you mark more than one answer for a question, the answer will be treated as wrong.
10. You should not remove or tear off any sheet from this question booklet. You are not allowed to take this question booklet and the answer sheet out of the examination hall during the time of examination. After the examination, you must hand over your answer sheet to the invigilator. You are allowed to take the question booklet with you only after the examination is over.
11. **You should not make any marking in the question booklet except in the sheet before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.**
12. For question Nos. 101 to 200, the English version is final.
13. You have to write and shade the total number of answer fields left blank on the boxes provided on page 2 of the OMR answer sheet. An extra time of 5 minutes will be provided for this purpose.
14. Failure to comply with any of the above instructions will render you liable for such action or penalty as the Commission may decide at their discretion.

---

SEAL